# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 27 / 2024

| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Saied Nasrulla |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 6th day of June, 2026.

**(A1 to A14, A16 to A20 are present. A15 is absent, Petition filed and allowed.)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 12.26 மணி

நான் தற்போது சென்னை கோபாலபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கிரானைட் ஏற்றுமதி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு பூவாலை கிராமத்தில் 70 ஏக்கர் மாந்தோப்பு உள்ளது. என் சகோதரி

பல்ஜிஸ் பேகத்திற்கு 40 ஏக்கர் மாந்தோப்பு உள்ளது. என் சகோதரிக்கு வயதாகிவிட்டதால் என் மூத்த சகோதரியின் மாந்தோப்பை அவருக்கு வயதாகிவிட்டபடியால் நான் தான் பராமரித்து வருகிறேன். 21-01-2021 ஆம் வருடம் என் அண்ணன் சாலியா பாஷா சர்வே எண் 5/2ல் ஒரு அரை ஏக்கர் நிலத்தை மூர்த்தி என்பவருக்கு விற்றார். அன்றைய தினம் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரும் வந்து இடத்தை அளந்தார்கள். அந்த இடத்திற்கு பக்கத்தில் ஆஜர் எதிரிகள் குப்பை போட்டிருந்தார்கள். நாங்கள் அளக்கும்போது அந்த குப்பை போட்டிருந்த இடம் வரை எங்கள் இடமாக இருந்தது. அந்த இடத்தை 21-01-2021 காலை அளந்துவிட்டு சென்றுவிட்டார்கள். பிறகு நான் சென்னை வந்துவிட்டேன். 21ஆம் தேதி இரவு அருள் தலைமையில் கூட்டம் போட்டுள்ளார்கள். அருள் இன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். என் சொத்தை அனுபவத்தை இடையூறு செய்ய வேண்டும் என்பதற்காக வேலியை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளார்கள். மறுநாள் 22-01-2021 காலை 9.30 மணிக்கு செங்கல்வராயன், மஸ்தான், சாபு, சேகர், அடிவோடன் மற்றும் பலர் சேர்ந்து கொண்டு கூட்டத்தில் தலைவர் சம்பூர்ணம்மாள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து 7 அடி 400 போஸ்ட் மற்றும் 2500 அடி நீளம் கொண்ட கம்பி வேலியை கடப்பாறை, கத்தி ஆகியவற்றை எடுத்துவந்து சேதப்படுத்திவிட்டார்கள். என்னுடைய தோட்டத்தை ஏகய்யா என்பவருக்கு குத்தகைக்கு விட்டிருந்தேன். மேற்கூறிய எதிரிகள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். வாட்ச்மேன் போலய்யாவும் சம்பவத்தின் போது இருந்தார். அவர்களையும் தடுத்திருந்தார்கள். எதிரிகள் போலய்யாவை தடுத்தால் உன்னையும் ஓனரையும் வெட்டிவிடுவேன் என்று மிரட்டியுள்ளார்கள். போலய்யா எனக்கு போன் செய்தார். நான் போனால் என்னை அடிப்பார்கள் என்ன செய்வது என்று என்னிடம் கேட்டார். நான் போலய்யாவிடம் போட்டோ எடு என்று கூறினேன். அவர் போட்டோ எடுத்து எனக்கு அனுப்பினார். 24-01-2021 அன்று மதியம் 1.00 மணிக்கு புகார் டைப் செய்து ஆரம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மாந்தோப்புல் உள்ள பூ மற்றும் பிஞ்சுகளை நாசம் செய்துள்ளார்கள்.

ஆகமொத்தம் ரூபாய் 11 லட்சத்திற்கு சேதம் ஏற்பட்டது. மோட்டார், கேபிள் ஆகியவற்றை தேசப்படுத்தியுள்ளார்கள். அதனுடைய சேதமதிப்பு ரூபாய் 20 ஆயிரம் ஆகும். சேதத்திற்கான சான்றிதழ் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். 25-01-2021 சேதத்திற்கான சான்றிதழ் வாங்கியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

புகார் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் என் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. பேச தெரியும். நான் பொன்னேரி நீதிமன்றத்தில் 2019 ல் ஊர் கிராம மக்கள் முன்னிலையில் எங்கள் நிலத்தின் வேலியை சேதப்படுத்தினார்கள் என்றும் மோட்டார் பம்செட்டை சேதப்படுத்தினார்கள் என்றும் இழப்பீடு கோரி சிவில் வழக்கு OS No. 25/2019 பதிவு செய்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் யாராவது அவ்வாறு வழக்கு தொடுத்துள்ளார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சம்பவம் பற்றி எனக்கு யார் கூறியது என்றால் போலய்யா என்னிடம் கூறினார். சம்பவம் நடப்பதற்கு முன்பதாக சம்பவம் நடக்கப்போகிறது என்று எனக்கு தெரியாது. 21-01-2021 அன்ற தேதியில் மூர்த்தி என்பவருக்கு சர்வே எண் 5/2 ல் உள்ள நிலத்தையோ, வேறு நிலத்தையோ விற்பனை செய்யவில்லை என்றால் அதற்கு முன்பதாகவே விற்றுவிற்றார்கள். சர்வே எண் 5/2 , சர்வே எண் 85/3A, 85/3B உண்டான சொத்து எனக்கு உரிமையானது அல்ல என்றால் சரிதான். என்பெயரில் இல்லை. என் தாயார் என் சகோதரிக்கு கொடுத்ததாகும். சர்வே எண் 12/2 மற்றும் சர்வே எண் 85/3 என்ற நிலத்திற்கும் இடையே 2 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. அரை கிமீ தூரம் இருக்கும். பூவலை கிராம மெயின்ரோட்டிலிருந்து மேற்கூறிய நிலம் 1.5 கிமீ தூரத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல 50 மீட்டர் தூரத்தில் உள்ளது. பூவலை கிராமத்தில் பொதுமக்கள்

பயன்பாட்டிற்கான மயானம், மேய்ச்சல் புறம்போக்கு ஆகிய நிலங்கள் எங்கள் குடும்பத்தால் ஆக்கிரமிரப்பு செய்யப்பட்டுள்ளது என்று ஊர்மக்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சர்வே எண் 85/1 & 85/2, 106/4, 106/12, 106/13 மேற்படி சர்வே எண்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பென்ச் ஆக்கிரமனங்களை அகற்ற உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவு பிறக்கப்பட்டது சர்வே எண் 106/11 மயானத்திற்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஆகும். சர்வே எண் 85/1 & 85/2 அனாதீனம் நிலங்கள் என்றால் சரியல்ல. அது என் பெயரிலுள்ள பட்டா நிலம் ஆகும். சர்வே எண் 85/1 & 85/2, 106/4, 106/12, 106/13 அரசுக்கு சொந்தமானது என DRO உத்தரவு பிறப்பித்துள்ளார் அது குறித்து எனக்கு தெரியுமா என்றால் மேற்படி உத்தரவு எங்கள் நிலத்திற்கு சம்பந்தப்பட்டதல்ல. சர்வே எண் 5/2 , சர்வே எண் 85/3A, 85/3B க்கு உரிமையாளர்கள் எந்தவித புகார் கொடுக்கவில்லை என்றால் எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்கள். என் சகோதரியின் சொத்தை 50 வருடங்களாக நான் தான் பராமரித்து வருகிறேன். என்னுடைய புகாரில் அதிகாரம் கொடுத்துள்ளார் அதனடிப்படையில் தான் புகார் கொடுத்துள்ளேன் என்ற விவரத்தை கூறியுள்ளனோ என்றால் புகாரில் அதுபற்றி கூறவில்லை. இந்நீதிமன்றத்தில் சர்வே எண் 85/1 & 85/2 சம்பந்தமாக அசல் வழக்கு எண் 10/2022 தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் அது பொன்னேரி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. சர்வே எண் 85/1 சொத்து செங்கல்வராயன் மற்றும் அவர் குடும்பத்தினர் பெயரில் உள்ள சொத்தாகும். அது அனாதீனம் நிலம் என அரசு பதிவேடுகளில் உள்ளது. அதற்கு எதிரிராக பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 85/1 ல் உள்ள சொத்தின் ஒரு பங்கு என் சகோதரி பல்கிஸ் பேகம் பெயரில் உள்ளது. நில உரிமையாளர்கள் எந்த வருடம் பவர் கொடுத்தார்கள் என்றால் 2021ல் பவர் கொடுத்தார்கள். தேதி, மாதம் ஞாபகமில்லை. வருடம் சரியாக ஞாபகமில்லை என்று சாட்சி தற்போது கூறுகிறார். நாகபூஷனம் இன்றைய தினம்

நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் இல்லை. எதிரி நாகபூஷனம் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். சம்பவம் நடந்தது குறித்து எனக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் சம்பவத்தன்று மதியம் 12.00 மணிக்கு எனக்கு போன் செய்தார். எனக்கு தகவல் கிடைத்த பிறகு நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் போட்டோ எடுத்து அனுப்ப கூறினேன். நான் போலீஸில் புகார் கொடுக்கிறேன் என்று கூறினேன். போட்டோ எப்போது எடுத்தார்கள் என்றால் ஆட்கள் இருக்கும்போது போட்டோ எடுத்தார்கள். போட்டோ உடனடியாக வந்ததா என்றால் 10 நிமிடத்தில் வந்தது. சம்பவம் நடந்தபிறகு என்ன செய்வது என்று யோசித்து பின்னர் ஒருநாள் கழித்து 24 ஆம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்றைய தினம் புகார் கொடுத்தேன் என்றால் 24 ஆம் தேதி புகார் கொடுத்தேன். சம்பவம் என்று நடந்தது என்றால் 22 ஆம் தேதி நடந்தது. நான் ஆரம்பாக்கம் காவல் நிலையத்திற்கு எத்தனை முறை சென்றிருப்பேன் என்றால் 3, 4 முறை சென்றிருப்பேன். சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பதாக ஒருமுறை சென்றிருக்கிறேன். சம்பவம் நடந்தபிறகு எத்தனை முறை சென்றிருப்பேன் என்றால் 2, 3 முறை சென்றிருப்பேன். காவல் நிலையத்தில் என்னை என்றைய தினம் விசாரித்தார்கள் என்றால் 24 ஆம் தேதி புகார் கொடுத்தபிறகு 3 அல்லது 4 நாட்களில் என்னை அழைத்து விசாரித்தார்கள். புகார் கொடுத்தவுடன் போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் ஊருக்கு வந்து விசாரணை செய்தார்கள். வழக்கு என்றைய தினம் பதிவு செய்ய எவ்வளவு நாள் ஆனது என்றால் ஒருவருடம் ஆனது. நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அப்போது நான் சென்னையில் இருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் இருந்து எத்தனை நாட்கள் கழித்து சம்பவயிடம் சென்று பார்த்தேன் என்றால் 25–01–2021 அன்று பார்த்தேன். நான் புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்தில் போட்டோக்களை ஏன் கொடுக்கவில்லை என்றால் நான் போட்டோ கொடுத்துள்ளேன். போட்டோக்களை இணைத்து கொடுப்பதாக புகாரில்

கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. போட்டோக்களை இணைத்து கொடுத்தேன். புகாரில் உள்ள விவரங்களும், 161 வாக்குமூலத்தில் உள்ள விவரமும் தெரியாது என்றாலும் புகாரில் உள்ள விவரங்கள் தெரியாமல் புகாரில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிராம மக்கள் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய அரசு நிலங்களை பெரும் முதலாளிகள் ஆக்கிரமிப்பு செய்ததால் எடுத்த சட்ட நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை :</u>**

குறுக்கு விசாரணையில் உயர்நீதிமன்ற உத்தரவு பெற்றுள்ளேன் என்று கூறியுள்ளேன். உயர்நீதிமன்ற உத்தரவு எண் என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த உத்தரவு என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் என்னால் தாக்கல் செய்ய முடியும்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.